**திருப்பூர் மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை: திரு.சிவகுமார், எம்.ஏ.**

**ந.க.எண்.இ1.4100/2018/ம1.** நாள் : 12.11.2018

பொருள் : மனைப்பிரிவு அனுமதி – திருப்பூர் மாநகராட்சி – மண்டலம் எண் –1 – வேலம்பாளையம் கிராமம் வார்டு எண்.14, க.ச.எண்.70/2சி, 1.16 ஏக்கர் நிலப்பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க அனுமதி வழங்குதல் – தொடர்பாக.

பார்வை : 1)திரு.சி. பழனிச்சாமி மற்றும் ஐவர் என்பவரது மனு நாள்.11.10.2017.
2)உறுப்பினர் செயலர் (பொ), திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம் ந.க.எண். 916 / 2017 /தி.உ.தி.கு. நாள் :17.09.2018
3) மாமன்றத் தீர்மானம் எண் 345 நாள் 17.09.2018.

----------

**உத்திரவு :-**

திருப்பூர் மாநகராட்சி, மண்டலம்–1, வேலம்பாளையம் கிராமம் வார்டு எண்.14 க.ச.எண். 70/2சி, 1.16 ஏக்கர் நிலப்பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க அனுமதி கோரியதன் பேரில், பார்வை 2–ல் கண்டுள்ள உத்திரவில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ./தி.உ.தி.கு. எண்.68/2018 என எண்ணிடப்பட்டு உறுப்பினர் செயலர் (பொ), திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம் அனுமதி வழங்கியுள்ளார்.

மேலும் மேற்படி மனைப்பிரிவில் அமையும் சாலைகள், மழைநீர் வடிகால் மற்றும் பூங்கா ஒதுக்கீடு நிலங்களை மாநகராட்சி பராமரிப்பிற்கு தானசாசனப் பத்திரம் எண்.3214/2018ல் 09.07.2018– அன்று ஒப்படை செய்யப்பட்டுள்ளது, மேலும் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குவது குறித்து தீர்மானத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே இத்துடன் இணைக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவு வரைபட எண்.ம.வ./தி.உ.தி.கு. எண். 68/2018 –ன் படியும் பார்வை 2–ல் கண்டுள்ள உறுப்பினர் செயலர் (பொ), திருப்பூர் உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின் படியும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கப்படுகிறது.

(ஒம்.)க.சிவகுமார்,
ஆணையாளர்
திருப்பூர் மாநகராட்சி.

/ உண்மைநகல் /

12/11/18

உதவி ஆணையர் (பொ),
மண்டலம் – 1
திருப்பூர் மாநகராட்சி.

12/11/18

**இணைப்பு :**
1) மனைப்பிரிவு வரைபடம் ம.வ./தி.உ.தி.கு எண். 68/2018
2) மனைப்பிரிவு நிபந்தனைகள்

**பெறுநர்**
திரு.சி.பழனிசாமி மற்றும் ஐவர்,
5ஏ, காந்தி நகர் 4வது வீதி,
திருப்பூர். 641604

**நகல் :**

1) உதவிபொறியர் (நகரமைப்பு) மண்டலம் எண்.1, வேலம்பாளையம்.
2) 'இ1' பிரிவு எழுத்தர், அசையா சொத்துப் பதிவேட்டில் பதிவு செய்ய
3) வருவாய் ஆய்வர், வேலம்பாளையம் மண்டலம், காலியிட வரிவிதிப்பு செய்ய
4) சார்பதிவாளர், 15வேலம்பாளையம், திருப்பூர் பத்திரபதிவு செய்ய.
5) இருப்பு கோப்பு

Scanned by CamScanner

**- திருப்பூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் (பொறுப்பு)**
**அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை : திரு.B.ரமேஷ்குமார், பி.இ., எம்.பி.ஏ.,**
**திட்ட அனுமதி**
**நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 49ன் கீழ்**

ந.க.எண். 916/2017 /திஉதிகு
தி.அ.எண். 15 / 2018 நாள் 17.09.2018

உள்ளாட்சியின் பெயர் : திருப்பூர் மாநகராட்சி

பொருள் : மனைப்பிரிவு - திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம் - திருப்பூர் மாநகராட்சி - வேலம்பாளையம் கிராமம் - க.ச எண். 70/2Cல் 1.16 ஏக்கர் பரப்பில் அமையும் உத்தேசக் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :
1. மனுதாரர்கள் திரு. C.பழனிசாமி மற்றும் திருமதி.P.தனலட்சுமி, திரு.R.கிருஷ்ணகுமார், திருமதி.R.K.மணிமேகலை, திரு.E.தியாகராஜன், திரு.T.சியாமளா, 2/169B1, வெங்காடு, முதலிபாளையம், பாப்பான்குளம் (அஞ்சல்) திருப்பூர்-641606. அவர்களின் விண்ணப்பம் நாள் 31.07.2017 மற்றும் 17.10.2017 அவர்கள் விண்ணப்பம் நாள்.
2. உதவி ஆணையாளர் (பொ), மண்டலம்-3, திருப்பூர் மாநகராட்சி. அவர்களின் கடிதம் ந.க எண்.இ1/4100/2017, நாள்.21.12.2017
3. உதவி பொறியாளர் (நெ) அலுவலகம் க(ம)ப, திருப்பூர் வட்டக்கு ந.க.எண்.12/1/உ.பொ நாள்.05.01.18

------0------

**உத்திரவு :**

திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமப்பகுதி / திருப்பூர மாநகராட்சி, வேலம்பாளையம் கிராமம், க.ச எண். 70/2C – ல் 1.16 ஏக்கர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு ம.வ/தி.உ.தி.கு. எண்.68 /2018 என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதியும் திட்ட அனுமதி எண்.15 / 2018 என எண்ணில் கீழ்க்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளின் படி திட்ட அனுமதியும் அளிக்கப்படுகிறது.

மனுதாரர் தேவையான உரிமங்களை மற்ற விதிகளின் கீழ் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**சிறப்பு நிபந்தனை**

நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி,திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி, திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்யஉரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறுயாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

Scanned by CamScanner